இரயில் விபத்துக்குத் தீர்வு காணப்படவில்லை:

இரயில்வே துறையில் பணியாளர்கள் போதுமான அளவில் இல்லை!

மக்களவையில் க.செல்வம் பேச்சு!

புதுடெல்லி, டிச.9-

ஒன்றிய பா.ஜ.க. ஆட்சியில் ரயில் விபத்துகள் அதிக அளவில் நடைபெற்று வருகின்றன என்றும், ரயில்வே துறையில் பணியாளர்கள் போதுமான அளவில் இல்லை என்றும், இரயில்வே திருத்த மசோதாவில் காஞ்சிபுரம் நாடாளுமன்றத் தொகுதி உறுப்பினர் க.செல்வம் பேசுகையில் குறிப்பிட்டார்.

இரயில்வே திருத்த மசோதா மீது காஞ்சிபுரம் நாடாளுமன்றத் தொகுதி உறுப்பினர் க.செல்வம் பேசியதாவது:-

இரயில்வே திருத்த மசோதா, 2024, 1905ன் இரயில்வே போர்டு சட்டத்தை ரத்து செய்ய முயல்கிறது. 1905 சட்டம், இந்திய இரயில்வேயை நிர்வகிப்பதற்கான இரயில்வே வாரியத்தின் அரசியலமைப்பை வழங்கியுள்ளது. 1989 ன் இரயில்வே சட்டத்தின் இரயில்வே வாரியம் தொடர்பான விதிகளை இணைக்க இந்த மசோதா முயற்சிக்கிறது. 1989 இரயில்வே சட்டம் நாட்டில் இரயில்வேக்கான சட்ட கட்டமைப்புகளை வழங்கியுள்ளது. இந்த மசோதாவானது மேற்படி இரண்டு சட்டங்களின் குறிப்பிட வேண்டிய மசோதாவுக்கான பொருள்கள் மற்றும் காரணங்களின் தேவைகளை நீக்குவதற்காக அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

இரயில்வே திருத்த மசோதா, 2024 பற்றி விவாதிக்க உள்ளேன். இந்த மசோதா இந்திய இரயில்வேக்கான சட்ட கட்டமைப்பை நெறிப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டிருந்தாலும், இரயில்வே வாரியத்தின் அரசியலமைப்பு குறித்து எனக்கு வருத்தம் உள்ளது.

இந்திய இரயில்வேயை வாழ்வாதாரமாக நம்பியுள்ள தமிழக மக்கள் உள்ளிட்ட எண்ணற்ற இந்தியர்களின் சார்பாக நான் கேள்வி எழுப்புகிறேன். சாதாரண மனிதனை துயரத்தில் ஆழ்த்தும் மசோதாவாக உள்ளது, பொது மனிதர்களுக்கு பாதிப்பு ஏற்படும் வகையிலும் விபத்துகள் குறித்து தீர்வு காணாமலும், பாதுகாப்புகள் குறித்தும் புறக்கணிக்கப்பட்டுள்ளது,

இரயில் விபத்துகளுக்கான முக்கிய காரணங்கள் குறித்து இரயில்வே பாதுகாப்பு ஆணையத்தின் (CRS) தரவை பகுப்பாய்வு செய்த பிறகு, பின்வரும் காரணங்களைச் சுட்டிக் காட்டியது.

7 ஆயிரம் ஆளில்லா லெவல் கிராசிங்குகள்!

2017-18 மற்றும் 2022-23 ஆண்டுக்கு இடையில், 292 ரயில் விபத்துக்கள் நடந்துள்ளன, அவற்றில் 220 விபத்துகள் தடம் புரண்டதால் ஏற்பட்டவை - மொத்தில் ஏற்பட்ட விபத்துக்களில் 75 சதவீதத்திற்கும் அதிகமானவை தடம் புரண்டதால் ஏற்பட்ட விபத்துக்கள்.

ஜூன் 2023இல் பாலசோர் ரயில் விபத்தினால் 288 உயிர்களை பலியாகின, மற்றும் 1,000க்கும் மேற்பட்ட பயணிகளுக்கு காயங்கள் ஏற்பட்டது, இவை பாதுகாப்பு அமைப்புகளில் வெளிப்படையான குறைப்பாடுகளை எடுத்துக் காட்டுகிறது.

ஆளில்லா லெவல் கிராசிங்குகள் கணிசமான எண்ணிக்கையிலான விபத்துகளுக்குக் காரணமாகின்றன. குறிப்பாக கிராமப் புறங்களில், அவற்றை அகற்றுவதற்கான நடவடிக்கைகள் இருந்தபோதிலும், 2023ஆம் ஆண்டு வரை சுமார் 7,000 ஆளில்லா லெவல் கிராசிங்குகள் உள்ளன.

இந்தியாவின் சிக்னலின் அமைப்பு பெரும்பாலும் மேனுவலாக (Manual) உள்ளது. இதனால் தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது. கவாச்சின் (Kavach) நிறுவல், இரயில்வேயின் தானியங்கி (Automatic) இரயில் பாதுகாப்பு அமைப்பு பாதுகாப்பு திட்டமானது "கடந்த மூன்று ஆண்டுகளில், 65 இன்ஜின்களில், 1,500 கி.மீ. தொலைவுக்கு மட்டுமே நிறுவப்பட்டுள்ளது. இது திட்டத்தின் மந்தநிலையை காட்டுகிறது.

அதேசமயம் இந்திய இரயில்வே அமைப்பானது 68,000 கி.மீ. தடம் வழிகளில் இயங்குகிறது, அவற்றில் 14,500-க்கும் மேற்பட்ட இன்ஜின்கள் சேவை செய்யப்படுகிறது. இதே மந்தநிலையில் திட்டம் நடைபெறுமேயானால் இத்திட்டம் முழுமை அடைய சுமார் 46 ஆண்டுகள் ஆகும்.

2022 ஆம் ஆண்டின் சி.ஏ.ஜி. அறிக்கையின்படி, 20 சதவீதத்திற்கும் அதிகமான இரயில் பாதைகள் அவற்றின் வடிவமைக்கப்பட்ட ஆயுட்காலத்திற்கும் மேலாக பயன்படுத்தப்படுகின்றன, இதனால் தடம் புரள்வதற்கான அதிக வாய்ப்புள்ளது இவை ஆபத்துகளுக்கு வழிவகுக்கிறது.

டெல்லி - மும்பை மற்றும் அவுரா - சென்னை போன்ற முக்கிய வழித்தடங்களில் 100 சதவித மின் மயமாக்கலை அடைவதை அரசாங்கம் இலக்காகக் கொண்டாலும், மந்தமான செயல்பாடுகளால் எரிபொருள் செயல்திறன் மற்றும் அதற்கான செலவுகளை அதிகமாக செலவிடுகிறது. டெல்லி மும்பை மற்றும் அவுரா சென்னை போன்ற முக்கிய வழித்தடங்கள் அதிக மக்கள் தொகை நிரம்பியுள்ள இரயில் நிலையங்களாக திகழ்கிறது. இந்த வழித்தடங்களில் இரயில்கள் 120 சதவீதத்திற்கும் அதிகமாக இயங்குகின்றன. இதனால் அதிக கால தாமதத்திற்கும் மற்றும் உள் கட்டமைப்பில் குறைபாடுகளுக்கும் வழிவகுக்கிறது.

காலாவதியான பெட்டிகள்

ஏறக்குறைய 40 சதவீத இரயில் பெட்டிகள் 20 ஆண்டுகளுக்கும் மேலானவை, இதனால் இவற்றின் செயல்திறன் குறைந்து இயக்கச் செலவுகளை அதிகரிகின்றன. இந்தியாவின் 7,349 இரயில் நிலையங்களில், ஒரு சிறிய பகுதி மட்டுமே நவீனப்படுத்தப்பட்டுள்ளது. கோடி கணக்கான மக்களுக்கு சேவை செய்யும் கிராமப்புற மற்றும் நகர்ப்புற இரயில் நிலையங்களில் அடிப்படை தேவைகளான சுத்தமான குடிநீர், தேவையான காத்திருப்பு இடங்கள் மற்றும் சுகாதாரமான கழிப்பறைகள் போன்ற அடிப்படை வசதிகள் இல்லை.

இந்தியாவில் பயணிகள், இரயில்கள் ஆகியவற்றின் எண்ணிக்கைக்கு ஈடுகொடுக்கும் வகையில், இரயில்வே துறையில் போதுமான அளவுக்குப் பணியாளர்கள் இல்லை என்பது நீண்ட நாள் முறையீடாக உள்ளது. கடந்த இரண்டு ஆண்டுகளில் இரயில் விபத்துகள் ஏற்படுவது அதிகரித்துள்ளதற்குப் பணியாளர்கள் பணிச்சுமையும் பற்றாக்குறையும் முதன்மைக் காரணமாகக் கூறப்படுகின்றன.

2021 நிலவரப்படி, இந்தியாவில் சராசரியாக 13,555 ரயில்கள் பயணிகளுக்காவும் சரக்குகள் எடுத்துச் செல்வதற்காகவும் இயக்கப்படுகின்றன. நாள் ஒன்றிற்கு 2 கோடி பேர் பயணம் செய்கின்றனர், 150 டன் கோடி சரக்குகள் எடுத்துச் செல்லப்படுகின்றன. மொத்தம் 18 மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டுள்ள ரயில்வேயில், மத்திய மண்டலத்தில் மட்டும் ஏறக்குறைய 50% காலிப் பணியிடங்கள் நிரப்பப்படாமல் உள்ளன. இரயில்களை இயக்குவது, பாராமரிப்பது ஆகிய பணிகளை உள்ளடக்கிய பயணிகளது பாதுகாப்பு நோக்கிலான துறைகளில் மட்டும் இவ்வளவு பற்றாக்குறை இருப்பது கவலையளிக்கிறது.

இந்திய ரயில்வேயின் குறைந்த பணியாளர் உற்பத்தித்திறன் ஒரு முக்கிய பிரச்சினையாக உள்ளது. இந்திய இரயில்வேயின் போக்குவரத்து உற்பத்தி, பயணிகள் மற்றும் சரக்குகள் டன்- கிலோ மீட்டர்கள் அடிப்படையில் ஒரு ஊழியருக்கு 400 குறைவாக உள்ளது, இதே சீன இரயில்வேயில் 500 ஆகவும், பிரெஞ்சு இரயில்வேயில் 570 ஆகவும் உள்ளது.

2023-ஆம் ஆண்டு நடத்தப்பட்ட ஆய்வில், 62 சதவித பயணிகள் இரயில் மற்றும் இரயில் நிலையங்களின் சுகாதாரம் குறித்து அதிருப்தி தெரிவித்துள்ளனர் பயோ-டாய்லெட்களின் (Bio-Toilet) பராமரிப்பு பெரும்பாலும் மோசமாக இருப்பதால் சுகாதாரமற்ற நிலை ஏற்படுகிறது.

50 சதவீதத்திற்கும் குறைவான இரயில் நிலையங்களில் மட்டுமே மாற்றுத்திறனாளிகளுக்கான சக்கர நாற்காலிகள் வசதி உள்ளது. இதனால் மாற்றுத்திறனாளி பயணிகள் மிகவும் பாதிப்பிற்கு உள்ளாகின்றனர். சரிவு பாதைகள், எலிவேட்டர்ஸ் (Elevators) மற்றும் பார்வையற்றவர்களுக்கான Tactile Pathways போன்றவை தேவையான அளவில் இல்லை.

2023 தரவுகளின்படி நான்கு ரயில்களில் ஒன்று தாமதமாக இயக்கப்படுவதால், இரயில் தாமதங்கள் ஒரு தொடர் பிரச்சினையாக உள்ளது. இதனால் ஸ்லீப்பர் கிளாஸ் (Sleeper Class) பெட்டிகளில் கூட்டம் அதிகமாக உள்ளது. இதனால் பயணிகளின் வசதி மற்றும் பாதுகாப்பில் அதிக குறைபாடுகள் ஏற்படுகிறது.

2022-23-ஆம் ஆண்டில் மானியக் கட்டணங்கள் காரணமாக இந்திய இரயில்வேக்கு பயணிகள் நடவடிக்கைகளில் ரூ.37,000/- கோடி இழப்பு ஏற்பட்டது. மொத்த வருவாயில் 60 சதவீத பங்களிப்பு சரக்கு இரயில்வேக்கு பயன்படுத்தப்படுகிறது. ஆனால் 2000-ம் ஆண்டில் 51 சதவீதமாக இருந்த சந்தை பங்கு தற்போது 2023-ம் ஆண்டில் 26 சதவீதமாக குறைந்துள்ளது என்பது பெருத்த கவலையளிக்கிறது.

பல ரயில்வே ஊழியர்கள், குறிப்பாக கேங்மேன்கள் மற்றும் இரயில் நிலைய ஊழியர்கள், போதிய பாதுகாப்பு உபகரணங்கள் மற்றும் வசதிகள் இல்லாமல் கடுமையான சூழ்நிலையில் வேலை செய்கிறார்கள்.

இந்திய இரயில்வேயில் தற்போது 3 லட்சத்துக்கும் அதிகமான காலிப்பணியிடங்கள் உள்ளன. அதில் 1.52 லட்சம் காலிப் பணியிடங்கள் பாதுகாப்பு முக்கியத்துவம் வாய்ந்த பணியிடங்களாக உள்ளன.

இதனால் இரயில்வே பணியாளர்கள் அதிக வேலை செய்யும் நிலையும் நீண்ட நேர பணியும் அதிகரிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. சட்டப்படி வாரத்திற்கு 104 மணிநேரம் பணியாற்றக் கூடிய இரயில் ஓட்டுநர்கள், வாரத்தில் 124 மணிநேரம் வரை வேலை செய்வதாகக் கூறப்படுகிறது.

இதனால் அவர்களின் பணிச்சுமை அதிகரித்து, அவர்கள் ஓய்வின்றி இருப்பதால், மன உளைச்சலுடன் பணியாற்றும் சூழலும் பாதுகாப்பின்றி பணியாற்றக் கூடிய சூழலும் உருவாகிறது .

பெண் இரயில் ஓட்டுனர்களுக்கு மகப்பேறு காலத்திற்கு ஆறு மாதங்களுக்குப் பிறகு வேலைக்குத் திரும்பும் சமயத்திலும் மாதவிடாய் நாட்களிலும் மருத்துவ சிகிச்சைக்கான விடுப்புகள் மறுக்கப்படுகிறது.

16 மணிநேர வேலைக்குப் பிறகு 30 மணிநேர தொடர்ச்சியான ஓய்வுக்கான கோரிக்கையை முன் வைக்கிறது, மற்றும் இரயில் ஓட்டுநர்களுக்கு வேலை நேரத்தை நாள் ஒன்றிற்கு 8 மணி நேரமாகவும், வாரத்திற்கு 48 மணிநேரமாகவும் குறைக்க பரிந்துரைக்கிறது.

ஸ்ரீதரன் கமிட்டி (2014)-ல் நிதி அதிகாரங்கள் மண்டல அளவில் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என்று பரிந்துரைத்தது. மண்டலங்களுக்கான சுயாட்சி இரயில்வே வாரியத்தை அணுகாமலேயே தங்கள் மண்டலங்களுக்கான திட்ட ஒப்பந்தப்புள்ளிகள் குறித்து முடிவெடுக்கும் அதிகாரத்தை வழங்கும்.

இரயில்வேயை மறுசீரமைப்பதற்கான குழு (2015) மண்டலங்கள் சுதந்திரமாக முடிவெடுக்க அனுமதிக்கப்பட வேண்டும் என்பதையும் அவற்றால் மண்டலங்களுக்கிடையில் ஆரோக்கியமான போட்டியை உறுதி செய்வதோடு, அவற்றின் போக்குவரத்து உற்பத்தி வெளிப்பாடு மற்றும் லாபம் ஆகியவற்றிக்கு பொறுப்பாக இருக்கும் என்று கருதியது.

மண்டலங்களுக்கு சுயாட்சி வழங்கபட்டவுடன், இரயில்வே வாரியம் கொள்கையை தீர்மானிக்கும் ஒரு நிறுவனத்தின் கார்ப்பரேட் வாரியம் போல் செயல்பட முடியும்.

இரயில்வே துறைக்கு சுதந்திரமான கட்டுப்பாட்டாளர்கள் தேவை என்று மே 2017-இல், ஒன்றிய அமைச்சரவை இரயில்வே மேம்பாட்டு ஆணையத்தின் (RDA) அரசியலமைப்பிற்கு ஒப்புதல் அளித்தது.

இந்திய இரயில்வே நமது நாட்டிற்கு பெருமை சேர்க்கும் துறையாகும், ஆனால் வளர்ந்து வரும் பொருளாதாரம் மற்றும் ஒரு பில்லியன் குடிமக்களின் அடிப்படை தேவைகளுக்கு ஏற்ப தேவைகளை பூர்த்தி செய்ய அவசர சீர்திருத்தம் தேவைப்படுகிறது.

அரசாங்கம் போதிய நிதிகளை ஒதுக்கி, மேற்படி நடவடிக்கைகளை இரயில்வே துறையில் விரைந்து செயல்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்த மகத்தான இரயில்வே நிறுவனத்தை பாதுகாப்பது மட்டுமல்லாமல், இரயில்வே போக்குவரத்தில் உலகளாவிய முன்னணி நிறுவனமாக மாற்றுவோம்.

இவ்வாறு க.செல்வம் எம்.பி. பேசினார்.

நெல்லை மாவட்டம் இராதாபுரம் வட்டம் சிதம்பராபுரம் ஊராட்சி ஆத்துக்குறிச்சி ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளியில் தமிழ்நாடு அரசின் கலைஞரின் வருமுன் காப்போம் மருத்துவம் முகாம் நடைபெற்றது. இந்நிகழ்வில் சட்டப் பேரவை தலைவர் மு.அப்பாவு பங்கேற்று முகாமை துவக்கி வைத்து நலத்திட்ட உதவிகளை வழங்கினார். நிகழ்வில் நெல்லை கிழக்கு மாவட்ட துணை செயலாளர் நம்பி,இராதாபுரம் மேற்கு ஒன்றிய செயலாளர் ஜோசப்பெல்சி,ஒன்றிய அவை தலைவர் ராமையா,மாவட்ட ஊராட்சி உறுப்பினர் ஜான்சு ரூபா,ஒன்றிய குழு உறுப்பினர்கள் படையப்பா, முருகன்,காந்திமதி, ஊராட்சி மன்ற தலைவர்கள் பொன் மீனாட்சி,பாலன்,துணை தலைவர் விஜய ராஜன், நெல்லை மாவட்ட சுகாதார பணிகள் துணை இயக்குனர் அலுவலரின் நேர்முக உதவியாளர் ராமசாமி உள்பட பலர் கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு அரசு

புயலிலும் சூறாவளியாய் சுழன்று பணியாற்றியது!

'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் பாராட்டு!

சென்னை, டிச.9-

தமிழ்நாடு அரசு புயலிலும் சூறாவளியாய் சுழன்று பணியாற்றி மக்களை காப்பாற்றியது என்று தினகரன் நாளேட்டின் நேற்றைய தலையங்கத்தில் பாராட்டியுள்ளது.

தினகரன் நாளிதழில் 'பாராமுகம் கூடாது' என்ற தலைப்பில் வெளியாகியுள்ள தலையங்கம் வருமாறு:-

தினகரன்

டிசம்பர் 8, 2024 ஞாயிற்றுக்கிழமை

பாராமுகம் கூடாது

வங்கக்கடலில் நிலவிய ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம், கடந்த வாரம் பெஞ்
லாக உருமாறியது. இந்த புயலானது மிக
துவாக கரையை கடக்கும் என்று எதிர்பார்க்
டது. ஆனால் தமிழ்நாட்டின் தலைநகரான செ
யில் கனமழை கொட்டித்தீர்த்தது. சென்னை
நகே புயல் கரையை கடக்கும் என்ற கணிப்
ாய்த்து. மரக்காணம் அருகே கரையை கடந்
னால் புதுச்சேரி மாநிலம் மிகுந்த பாதிப்பு
ளானது. அதேபோல் கடலூர், கள்ளக்குறி
ழப்புரம், கிருஷ்ணகிரி, திருவண்ணாம
வட்டங்களும் வெள்ளத்தில் மூழ்கியது.
குறிப்பாக தென்பெண்ணை ஆற்றில் ஏற
ள்ளப்பெருக்கால் கரையோரம் வசித்த மக்

வங்கக்கடலில் நிலவிய ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதி பெஞ்சல் புயலாக உருமாறியது. இந்த புயலானது மிகவும் மெதுவாக கரையை கடக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் தமிழ்நாட்டின் தலைநகரான சென்னையில் கனமழை கொட்டித்தீர்த்தது. சென்னைக்கு அருகே புயல் கரையை கடக்கும் என்ற கணிப்பும் பொய்த்து, மரக்காணம் அருகே கரையை கடந்தது. இதனால் புதுச்சேரி மாநிலம் மிகுந்த பாதிப்புக்கு உள்ளானது. அதேபோல் கடலூர், கள்ளக்குறிச்சி, விழுப்புரம், கிருஷ்ணகிரி, திருவண்ணாமலை மாவட்டங்களும் வெள்ளத்தில் மூழ்கியது.

குறிப்பாக தென் பெண்ணை ஆற்றில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கால் கரையோரம் வசித்த மக்கள் வெகுவாக பாதிக்கப்பட்டனர். 14மாவட்டங்களில் இதன் தாக்கம் பெருமளவில் இருந்தது. திருவண்ணாமலையில் திடீரென ஏற்பட்ட மண்சரிவில் சிக்கி 7 உயிர்கள் பலியான சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. இப்படி மக்களின் உடமைகள் மட்டுமன்றி உயிருக்கும் உலை வைத்துச் சென்றது பெஞ்சல் புயல்மழை. இருப்பினும் திறம்பட பாதிப்புகளை எதிர்கொண்டது தமிழ்நாடு அரசு. புயலிலும் சூறாவளியாய் சுழன்றது அரசு இயந்திரம். இதன் காரணமாக பாதிப்புகளிலிருந்து சற்று ஆசுவாசம் அடைந்தனர் மக்கள்.

இப்படிப்பட்ட சூழலில் கடந்த 2ம்தேதி ஒன்றிய அரசுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம் ஒன்றை எழுதினார். அதில் "பெஞ்சல் புயலால் ஏற்பட்ட சேதங்களில் இருந்து தமிழ்நாட்டை மீட்க வேண்டும். முதற்கட்ட ஆய்வின்படி, தற்காலிக சீரமைப்பு பணிகளுக்கு 2,475 கோடி தேவைப்படுகிறது. பாதிப்புகளின் அளவு மற்றும் அவசரத்தேவையை கருத்தில் கொண்டு இடைக்கால நிவாரணமாக 2 ஆயிரம் கோடியை உடனடியாக விடுவிக்க வேண்டும். பாதிப்புகளை நேரில் ஆய்வு செய்ய உடனடியாக ஒன்றிய பல்துறை குழுவை அனுப்பி வைக்க வேண்டும்," என்று தெரிவித்திருந்தார். இதையடுத்து 3ம்தேதி முதல்வரை தொடர்பு கொண்ட பிரதமர், தமிழ்நாட்டில் பெஞ்சல் புயல் பாதிப்புகள் மற்றும் சேதங்கள் குறித்து கேட்டறிந்தார்.இதன் தொடர்ச்சியாக வெள்ள பாதிப்புகளை ஆராய்வதற்கான ஒன்றிய அரசின் குழுவினர் தமிழ்நாட்டிற்கு வந்துள்ளனர். அவர் கள் முதல்வருடனும் ஆலோசனை நடத்தினர். அப்போது பயிர்கள், கால்நடைகள், கட்டிடங்கள், உடமைகள் என்று மக்களுக்கு ஏற்பட்ட புயல் பாதிப்புகளை நிரந்தரமாக சரிசெய்யவும், நிவாரணம் வழங்கவும் 6,675 கோடி தேவைப்படுகிறது. இதை ஒன்றிய அரசு வழங்கவேண்டும் என்று ஆணித்தரமாக வலியுறுத்தி உள்ளார்.

இந்தநிலையில் மாநில பேரிடர் நிதியில் இருந்து தமிழ்நாட்டிற்கு 944 கோடி விடுவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக வெளியாகி உள்ள அறிவிப்பில், "கடந்த 30ம்தேதி, பெஞ்சல் புயலால் பாதிக்கப்பட்டதமிழ்நாட்டு மக்களுக்கு நிவாரண உதவி அளிக்கும் வகையில் மாநில பேரிடர் மேலாண்மை நிதியிலிருந்து ஒன்றிய அரசின் நிதியாக 944.80கோடி வழங்க உள்துறை அமைச்சகம் அனுமதி வழங்கியுள்ளது," என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. பாதிப்புகளை ஆதாரத்துடன் சுட்டிக் காட்டி முதல்வர் கேட்ட நிதிக்கும், இதற்கும் உண்டான வித்தியாசம் மலைக்கும்,மடுவுக்குமானது.

அதேநேரத்தில் ஒன்றியக் குழுவின் இறுதி அறிக்கை கிடைத்தவுடன் கூடுதல் நிதி ஒதுக்குவது குறித்து பரிசீலித்து நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஒன்றிய அரசு அறிவித்துள்ளது. கடந்த காலங்களில் நிகழ்ந்த இயற்கை பேரிடர்களின் போது மாநில அரசு கேட்ட நிதியும், ஒன்றிய அரசு ஒப்புக்கு ஒதுக்கிய நிதியும் சர்ச்சைகளின் உச்சமானது. பெஞ்சல் புயல்பாதிப்பு நிவாரண நிதியிலும் அது போன்ற பாராமுகம் இருக்கக் கூடாது என்பதே பரிதவித்து நிற்கும் தமிழ்நிலத்து மக்களின் எண்ண ஓட்டமாக நிற்கிறது.

இவ்வாறு 'தினகரன்' தலையங்கத்தில் குறிப்பிட்டுள்ளது.

இராமநாதபுரத்தில் பா.ஜ.க.வினர் கழகத்தில் இணைந்தனர்!

இராமநாதபுரம், டிச.9-

திராவிட மாடல் ஆட்சி நாயகன் கழகத் தலைவர் தமிழ்நாடு முதல்வர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் நல்லாட்சியை விரும்பிய இராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடி, முதுகுளத்தூர், இராமநாதபுரம் ,ஆகிய சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட பகுதிகளில் இருந்து அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த ஆதனகுறிச்சி ஊராட்சி மன்ற தலைவர் ராமலட்சுமி அவரது மகன் கார்த்திக் மற்றும் ஆணைசேரி ஊராட்சி மன்ற தலைவர் முருகவேல் மற்றும் பாரதிய ஜனதா கட்சியைச் சேர்ந்த ஹரிராஜ் தலைமையிலும் அம்மா மக்கள் முன்னேற்ற கழகத்தைச் சார்ந்த கிளைச் செயலாளர் வடிவேல் தலைமையிலும் மாயாகுளம் அதிமுக மகளிர் அணி உமா மகேஸ்வரி தலைமையிலும் பரமக்குடி வடக்கு நகரம் பாரதிய ஜனதா கட்சியைச் சார்ந்த மாவட்ட தொழில் பிரிவு செயலாளர் ராகவேந்திரன் மற்றும் அவருடன் பரமக்குடி நகரக் கழகத்தை சேர்ந்த நிர்வாகிகளும், ஆதன குறிச்சி, கிழவனேரி, கண்ணன்கோட்டை, பள்ளிவாசல் கோட்டை, நீர் கோலியேந்தல், பெருங்கருணை, மாயாகுளம், உட்பட்ட கிராமங்களில் இருந்து சுமார் 2500 க்கும் மேற்பட்ட மகளிர் மற்றும் இளைஞர்கள் இராமநாதபுரம் மாவட்ட கழக செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் காதர் பாட்ஷா முத்துராமலிங்கம், முன்னிலையில் தங்களை திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைத்துக் கொண்டனர். தங்களை திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைத்துக் கொண்ட அனைத்து தொண்டர்களும் கருப்பு சிவப்பு வேட்டி மட்டும் துண்டு, அணிந்தும், மகளிருக்கு கருப்பு சிவப்பு வண்ணத்தில் புடவை வழங்கியும் வரவேற்றார்.

இந்நிகழ்ச்சியில் பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் செ. முருகேசன், முன்னாள் அமைச்சர், மாவட்ட அவைத்தலைவர் சத்திய மூர்த்தி,மாநில விவசாய அணி துணைச் செயலாளர் குணசேகரன், மற்றும் மாவட்ட கழக துணைச் செயலாளர் கருப்பையா, ஆதித்யன், இராமநாதபுரம் நகர் மன்ற தலைவர் ஆர்.கே.கார்மேகம், துணைத் தலைவர் பிரவீன் தங்கம், பரமக்குடி நகர் மன்ற தலைவர் சேது கருணாநிதி, இராமநாதபுரம் ஒன்றிய பெருந் தலைவர் கே.டி.பிரபாகரன், மற்றும் ஒன்றிய செயலாளர்கள் வாசுதேவன் கே.ஜே.பிரவீன், சண்முகம், உதய குமார், ராஜாராம், மற்றும் மாவட்ட தொண்டரணி அமைப்பாளர் பி. டி. ராஜா, உட்பட கட்சி நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

இளையான்குடி கிழக்கு ஒன்றியம் சார்பாக சூரணம் புனித ஜேம்ஸ் தொடக்கப்பள்ளியில் துணை முதலமைச்சர் அவர்கள் பிறந்த நாள் விழா நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்வு மேனாள் அமைச்சர் சட்டமன்ற உறுப்பினர் திருமதி தமிழர் ரவிக்குமார் தலைமையில் ஒன்றிய கழக செயலாளர் வே. தமிழ் மாறன் முன்னிலையில் மாணவச் செல்வங்களுக்கு ஸ்கூல் பேக் நோட் பேனா பென்சில் ரப்பர் இனிப்புகள் வழங்கினர். இந்நிகழ்வில் ஒன்றிய பொருளாளர் ஆரோக்கியதாஸ் அவர்கள் மாவட்ட பிரதிநிதிகள் கண்ணன் முத்துக்குமார் குருசாமி, ஒன்றிய கவுன்சிலர் செழியன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் பொற்கோ, ஐடி துணை அமைப்பாளர் வினோத், இளைஞரணி அமைப்பாளர் சிவகுமார், துணை அமைப்பாளர்கள் ஜஸ்டின், இளங்கோ தனபாலன், கிளை நிர்வாகிகள், சார்பணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர் .

தேனி வடக்கு மாவட்டம், பெரியகுளம் வடக்கு ஒன்றிய செயலாளர் எல்.எம்.பாண்டியன் ஏற்பாட்டில் கழக மாநில இளைஞர் அணி செயலாளர் தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு வடுகபட்டியில் வள்ளலார் ஆதரவற்றோர் முதியோர் இல்லத்தில் வடக்கு மாவட்ட செயலாளர் தங்க தமிழ்ச்செல்வன் எம்.பி., உணவு வழங்கினார். இதில் சரவணகுமார் எம்.எல்.ஏ., மாவட்ட அவைத் தலைவர் பி.டி.செல்லபாண்டியன் உத்தமபாளையம் முன்னாள் ஒன்றிய செயலாளர் முல்லை சேகர்மற்றும் கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.